1987 மே 5] [பேரவைத் தலைவர்]

பேரவைக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

1. திரு. சு. சிவராஜ்
2. திரு. சா. ஞானசுந்தரம்
3. திரு. துரை அன்பரசன்

எனவே, தேர்தல் தேவையில்லை என்பதையும் அறிவிக்கிறேன்.

3. தகவல் கோரல்

வினாக்களுக்கு விடைகள் அனுப்புவதில் துறைகளில் ஏற்படும் தாமதம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இன்று கேள்வி நேரத்தில் என்னுடைய கேள்வியை நான் போட்டபோது, 5, 6 மாதங்களுக்கு முன்னால் போட்ட கேள்விக்கு அண்மையில் பதில் வந்தவுடனே பட்டியலில் போட்டு வந்துவிட்டது என்று சொன்னார்கள். இதற்கு முன்னாலே கூட கேள்வி போட்டபோதும் பதில் வருவதற்கு நீண்டநாள் ஆகிவிட்டது. சம்பந்தப்பட்ட துறையிலிருந்து இங்கே வந்தவுடன் தாமதம் இல்லாமல் பதில் தரப்படுகிறது. ஆனால் நீண்டநாட்களாகப் பதில் வராமல் இருக்கும்போது சம்பந்தப்பட்ட இலாகாவைக்கோரி, விரைவிலே பதில் பெறுவதற்கு என்ன நடவடிக்கை என்று ஒரு உறுப்பினர் கேட்டார்; நானும் கேட்கிறேன். நாங்கள் கேள்வியை அனுப்புகிறோம். 6 மாதம், ஒரு வருடம் கூட கழித்துப் பதில் வருகிறது என்றால் அரசுதான் அதற்கு பொறுப்பு. பதில் தருவதில் தாமதம் ஏற்படுகிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, உறுப்பினர்கள் போடுகின்ற கேள்விகளுக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பதிலைப் பெற்று, 41 நாட்களுக்குள்ளாகப் பதில் வாங்கித் தருவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவரவர்களே உடனடியாகப் பதில் தர அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். சில கேள்விகளின் தன்மையைப் பொறுத்து, நிறைய விவரங்களைப் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது தவிர்க்க முடியாமல் சற்று, காலதாமதம் ஏற்படுகிறது. கேள்விகளைப் பொறுத்தவரையில் எதைப்பற்றிக் கேட்கிறார்கள், என்ன விவரத்தைக் கோருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் காலதாமதம் ஏற்படுகிறது.

[1987 மே 5

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, நான் கேட்டதற்குச் சரியான பதில் வரவில்லை. கடுமையான கேள்விகளாக இருந்தால் அரசு இலாகா 40, 41 நாட்களுக்குள்ளாகப் பதில் பெற முடியாது என்பது சரியல்ல. சாதாரணக் கேள்வியாக இருந்தாலும் கடுமையான கேள்வியாக இருந்தாலும் 41 நாட்களுக்குள்ளாகப் பதில் தருகின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இதுபற்றி என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவரவர்களே, இதே பிரச்சினைதான் (மணியடிக்கப் பெற்றது) வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு நான் பதில் சொல்லி விட்டேன். என்னுடைய அலுவலகத்தில் தாமதம் கிடையாது. அமைச்சகங்களிலிருந்து பதில் வந்தவுடன் அது முறைப்படி அவைக்கு வந்துவிடும். பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு நாளைக்கு 10 கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கேள்விக்கும் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படுகிறது. விரைவிலே பதிலை அனுப்ப வேண்டும் என்று என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்களைப் பொறுத்த வரையிலும் இவ்வளவு நாட்களுக்குள்ளாகப் பதில் வரவேண்டுமென்று திட்டவட்டமாகத் தெளிவாக விதிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக வினாக்களுக்கான விடைகளைத் திரட்ட முடியவில்லை என்றால் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்தில் அனுமதி பெற்று சில காலம் நீட்டிக்கலாம் என்று இருக்கிறது. ஆனாலும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வரவேண்டுமென்றுதான் எல்லாத் துறைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில்கூட தாங்கள் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது விரைவுபடுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட

1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நாட்களுக்குள்ளாக கேள்விகளுக்கான ஏதாவது பதில் வரவேண்டும் என்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தினை இந்த அவை ஏற்றுக்கொள்கிறது. அதனை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிலபல நேரங்களில் குறிப்பிட்ட பதிலைத் திரட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிற போது அவைத் தலைவருடைய அனுமதி பெற்று சில காலம் நீட்டிக்கிற வகையில் இருக்கிறதே தவிர இரண்டு வருடம், மூன்று வருடம் என்று நீட்டிக்கிற வாய்ப்பு இல்லை. அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வை அடிப்படையாக வைத்தும், மாண்புமிகு அவைத்தலைவர் அவர்கள் கூறிய கருத்தை அடிப்படையாக வைத்தும் துறையினர் உரிய கவனம் செலுத்தி இந்த விதிமுறைகளுக்கு மதிப்பளித்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக விடைகளை அனுப்புகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கான முறைகளில் இந்தச் சட்டமன்றச் செயலகம் மீண்டும் நினைவு படுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 231 (1)-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987-88 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு முதல் அமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு உணவு அமைச்சர்
4. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர்.
7. திரு. துரை கோவிந்தராசன், ஆளுங்கட்சித் தலைமை கொறடா.
8. திருமதி. டி. யசோதா
9. திரு. சி. பழனிமுத்து